தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் - 641 003

முனைவர் ரவி குமார் தியோடர், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (விரிவாக்கம்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 4-7-2011

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஜூலை 2011 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு

இம்மாதம், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், பயிர்களில் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலின் அளவு பொருளாதார சேத நிலைக்குக் கீழே காணப்பட்டது. எனவே விவசாயிகள் தங்களது விளைநிலங்களில் விளக்குப்பொறி வைத்து பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதி மற்றும் நெல் பயிரிடப்படும் பிற பகுதிகளின் விவசாயிகள் பயன்பெற கீழ்க்கண்ட பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன.

### நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய்க்கட்டுப்பாடு:

நெல் நாற்றங்காலில் இலைப்பேன் மற்றும் கூண்டுப்புழு ஆகிய பூச்சிகளும், இலைப்புள்ளி மற்றும் குலைநோய் போன்ற நோய்களின் தாக்குதலும் குறுவைப்பருவத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலிருந்து பயிர்களைப் பாதுகாக்க உழவர்கள் கீழ்க்கண்ட பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

**விதைநேர்த்தி:** ஒரு கிலோ விதையை கார்பென்டசிம் 2 கிராம் அல்லது *சூடோமோனாஸ் புளூரசன்ஸ்* 10 கிராம் என்ற விகிதத்தில் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து ஓர் இரவு முழுவதும் ஊற வைத்துப் பின்னர் விதைக்க வேண்டும். நாற்றுகளை நாற்றங்காலிலிருந்து பறிப்பதற்கு 48 மணி நேரத்திற்கு முன்னர் *சூடோமோனாஸ் புளூரசன்ஸ்* 1.5 கிலோ / 20 சென்ட் நாற்றங்கால் மற்றும் மக்கிய தொழு உரம் 30 கிலோ என்ற அளவில் இடவேண்டும்.

**நடவிற்கு முன் வேரை நுண்ணுயிருடன் நனைத்தல் :**

25 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நெல் வயலில் 2.5 செ.மீ அளவிற்கு நீரை தேக்கி அதில் 2.5 கி *சூடோமோனாஸ் புளூரசன்ஸ்* நுண்ணுயிரியை பரவலாக கரைக்க வேண்டும். இந்த நீரில் 20 சென்டிலிருந்து பறித்து எடுக்கப்பட்ட நாற்றுக்களின் வேர்பாகம் நன்கு நனையுமாறு 30 நிமிடம் வைத்திருந்து நடவுக்கு பயன்படுத்தவும்.

**பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் முறை**

- விளக்குப்பொறி அமைத்து அந்திப் பூச்சிகளையும், மற்ற பூச்சிகளையும் கவர்ந்து அழிக்கலாம்.
- வேப்பங்கொட்டை விதைக் கரைசல் 5% ஒட்டும் திரவத்துடன் கலந்து 5 மி. லி / லிட்டர் என்ற விகிதத்தில் தெளிக்கவும்.
- வேப்பம் பிண்ணாக்கு 12.5 கிலோவை 20 சென்ட் நாற்றங்காலில் அடியுரமாக இட வேண்டும்.
- நாற்றங்காலில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த பாஸ்போமிடான் 40 எஸ். எல் - 50 மி.லி / எக்டருக்கு

அல்லது

ஃப்ரொபினோபாஸ் 50 இ.சி – 1000 மி. லி / எக்டருக்கு தெளிக்கவும்.

மேலும், விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள:

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வேளாண் பூச்சியியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003
தொலைபேசி: 0422-6611214

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயிர் நோயியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003
தொலைபேசி: 0422- 6611226

மக்கள் தொடர்பு அலுவலர்